மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025ம் ஆண்டு ஆக்ஸ்ட் திங்கள் 08ம் நாள் வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.08/2014
இன்
அசல் வழக்கு எண்.40/2021
-------

முருகேசன் யாதவ் .. மனுதாரர்/பிரதிவாதி

/எதிர் /

கண்ணன் .. எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 21.07.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எம். மைக்கேல் பாரதி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. மணிவண்ணன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது தபசில் கட்டிடத்தில் மின்இணைப்பு எப்பொழுது என்ன காரணத்திற்காக ரத்து செய்யப்பட்டது என்ற விவரத்தை சான்றாவணங்களுடன் நீதிமன்றத்தில் தெளிவுற எடுத்துரைக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விருதுநகர் மின் பகிர்மான வட்டம் துலுக்கபட்டி பிரிவு மின்பகிர்மான உதவி மின் பொறியாளரை நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளித்து சான்றாவணங்கள் குறியீடு செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டி கட்டளை 16 விதி 1, 2 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கில் பிரதிவாதியான எனது சொத்தில் வாதி வாடகைக்கு இருந்து வருவதாகவும், வாதியை பிரதிவாதியான நான் வாடகை கட்டிடத்திலிருந்து சட்டத்திற்கு புறம்பாக காலி செய்யக்கூடாதென பொய்யான காரணங்களை கூறி நிரந்தர நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். ஷை அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், தபசில் சொத்தில் தற்போதும் எதிர்மனுதாரர் கடை நடத்தி வருவதாக தனது சாட்சியத்தில் கூறியுள்ளார்.

**2.2.** மேலும் பி.வா.சா.1 சாட்சியாக என்னை வாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்யும்பொழுது இந்த எதிர்மனுதாரர் தற்பொழுதும் கடை நடத்தி வருவதாகவே கட்சி செய்து வருகின்றார். ஆனால் வழக்கிடை தபசில் சொத்தில் மின் இணைப்பு கடந்த 30.07.2021ம் தேதி ரத்து செய்யப்பட்டுவிட்டது. தற்போது கடை கடந்த 18.04.2021ம் தேதியிலிருந்து முழுமையாக எனது கட்டுப்பாட்டில் வந்த மனுதாரருடைய அனுபவத்திலும் ஆளுகையிலும் இருந்து வருகின்றது. எனவே தபசில் கட்டிடத்தில் மின் இணைப்பு எப்பொழுது என்ன காரணத்திற்காக ரத்து செய்யப்பட்டது என்ற விவரத்தை சான்றாவணங்களுடன் நீதிமன்றத்தில் தெளிவுற எடுத்துரைக்கதமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விருதுநகர் மின்பகிர்மான வட்டம் துலுக்கபட்டி பிரிவு மின்பகிர்மான உதவி மின் பொறியாளரை மாண்புமிகு நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளித்து சான்றாவணங்களை குறியீடு செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லையேல் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டமும் ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படும். மனுதாரர் இந்த மனுவை காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கில் தாக்கல் செய்யவில்லை. மாறாக தபசில் கட்டிடத்தின் தற்போதைய நிலை குறித்து இந்நீதிமன்றத்திற்கு தெளிவாக எடுத்துரைக்கவே இம்மனுவினை தாக்கல்

செய்துள்ளார்.

3. **இ.ம.எண்.07/2024 மனுவில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு இ.ம.எண்.08/2024 மனுவில் எதிர்மனுதாரர்/வாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம் –**

**3.1.** மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பான சங்கதிகள் ஆகும். இந்தநிர் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி வாடகை ஒப்பந்த அடிப்படையில் கடை நடத்தி வருவதை இந்நிர் மனுதாரர்/பிரதிவாதியோ அல்லது அவரது வகையாட்களோ சட்டத்திற்கு முரணான வழியில் கடையை காலி செய்ய கூடாதென்றும், நிரந்தர நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். ஷை வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி பொய்யான காரணங்களை தெரிவித்து வழக்கினை கட்சி செய்து வருகின்றார். ஷை வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவானது முற்றிலும் இந்த வழக்கிற்கு எந்தவிதத்திலும் சம்பந்தமில்லாத நடவடிக்கையாகும்.

3.2. ஷை வழக்கானது சட்டத்திற்கு முரணான வழியில் கடையை காலி செய்ய கூடாதென்றும், நிரந்தர நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் மட்டுமே அல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதே தவிர தபசில் சொத்திலிருந்து வரும் கடைக்கு கரண்ட் இருக்கிறதா இல்லையா என்ற விபரம் தெரிவதற்காக இல்லை என்பதை நினைவு கூறப்படுகிறது. அதனை மறைத்து பொய்யான காரணங்களை கூறி வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். இதிலிருந்தே தெளிவாக மனுதாரர்/பிரதிவாதி வேண்டுமென்றே அசல் வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும், எதிர்மனுதாரர்/வாதியை அலைக்கழிப்பு செய்து மன உளைச்சலுக்கு ஆளாக்க வேண்டுமென்ற எண்ணத்திலும் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3.3. அசல் வழக்கில் இருதரப்பின் விசாரணை முடிந்து அசல் வழக்கானது முடிவடையும் சமயத்தில் ஷை வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற

எண்ணத்தில் இந்த இடைக்கால மனுவானது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. மேலும் இந்த சாட்சியானவர் இந்த வழக்கிற்கு அவசியமற்ற சாட்சி ஆவார். இந்த அசல் வழக்கிற்கும் இந்த சாட்சியத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. மேலும் தபசில் கட்டிடத்தின் தற்போதைய நிலை குறித்து இந்த சாட்சியானவர் மூலம் எந்தவித நிலையும் தெரிவிக்க இயலாது. ஆகவே மனுதாரர் மனுவை எதிர்மனுதாரர் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** **தீர்வு**

6.**1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி. துலுக்கபட்டி பிரிவு மின்பகிர்மான உதவி மின் பொறியாளரை நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளித்து ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் தபசில் சொத்தில் தற்போதும் எதிர்மனுதாரர் கடை நடத்தி வருவதாக சாட்சியத்தில் கூறியுள்ளதாகவும், மேலும் பி.வா.சா.1-யை வாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்யும்பொழுது இந்த எதிர்மனுதாரர் தற்பொழுதும் கடை நடத்தி வருவதாகவே கட்சி செய்து வருகிறார். வழக்கிடை தபசில் சொத்தில் மின் இணைப்பு கடநத 30.07.2021 அன்று ரத்து செய்யப்பட்டுவிட்டது. தற்பொழுது கடை 18.04.2021ம் தேியிலிருந்து முழுமையாக பிரதிவாதி கட்டுப்பாட்டில் வந்த மனுதாரருடைய அனுபவத்திலும் ஆளுகையிலும் இருந்து வருகிறது. எனவே தபசில் கட்டிடத்தின் தற்போதை நிலை குறித்து நீதிமன்றத்திற்கு தெளிவாக எடுத்துரைக்கவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில் மனுதாரர்/பிரதிவாதி வேண்டுமென்றே அசல் வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும், எதிர்மனுதாரர்/வாதியை அலைக்கழிப்பு செய்து மன உளைச்சலுக்கு ஆளாக்க வேண்டுமென்ற எண்ணத்திலும் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3** மனு சம்மந்தமான வாதுரை கேட்கப்பட்டது. மனுதாரர் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவார். பிரதிவாதியின் சொத்தில் வாதி வாடகைக்கு இருந்து வருவதாக கூறப்பட்டுள்ள நிலையில், தற்பொழுதும் எதிர்மனுதாரர்/வாதி கடை நடத்தி வருவதாகவும் வாதி தரப்பு குறுக்கு விசாரணையில் பி.வா.சா.1 அவ்வாறே கூறியுள்ள நிலையில், பிராதில் ஷை வழக்கானது சட்டத்திற்கு முரணான வழியில் கடையை காலி செய்யக்கூடாது என்றும் நிரந்தர நிலையுறுத்துக கட்டளைப் பரிகாரம் கோரப்பட்ட இவ்வழககில் அனுபவம் குறித்து தீர்மானிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழலில் மனுதாரர் கோரியுள்ள வேண்டுதலுக்கு ஏற்ப இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**6.4**. மனுதாரர் இந்த மனுவில் தபசில் கட்டிடத்தில் மின்இணைப்பு எப்பொழுது என்ன காரணத்திற்காக ரத்து செய்யப்பட்டது என்ற விவரத்தை சான்றாவணங்களுடன் நீதிமன்றத்தில் தெளிவுற எடுத்துரைக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விருதுநகர் மின் பகிர்மான வட்டம் துலுக்கபட்டி பிரிவு மின்பகிர்மான உதவி மின் பொறியாளரை நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளித்து சான்றாவணங்களை குறியீடு செய்ய வேண்டியுள்ளதால் இந்த மனுவில் மனுதாரர் கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என தீர்வு காணப்படுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை

இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

**<u>சாட்சி, சான்றாவணங்கள்</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்துார்.
இ.ம.எண்.08.2024
இன்
அ.வ.எண்.40/2021
**உத்தரவு**
நாள்-08.08.2025.